| Page No.9 | |
|---|---|
| **சார்பு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்** | |
| நாள் | 04.04.2025 |
| O.S. No. | 157/2004 |
| பி.சா.2 | **கண்ணகி** |

2025ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 04–ம் நாள் கண்ணகி என்பவரின் சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1969ம் ஆண்டின் 54வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின்படி திரு.எஸ்.ஜீவாபாண்டியன்,M.Com.,M.Phil.,M.L., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | கண்ணகி | சமயம் | : |
| தந்தை பெயர் | : | | தொழில் | : |
| கிராமம் | : | | வயது | : |
| தாலூக்கா | : | | | |

வாதியின் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி –

(சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது)

1. அண்ணாமலை முதலியார் உயிருடன் இருந்த காலத்திலேயே சொத்துக்கள் கூட்டு குடும்ப சொத்துக்களாக உள்ளதால் உயில் எழுதி வைக்க முடியாது என கூறி 6ஆம் பிரதிவாதி அறிவிப்பு அனுப்பிவைத்தார் என்றால் சரிதான். மேற்படி உயிலின்படி அனுபவித்தை யாரும் எந்த காலத்திலும் ஆட்சேபனை செய்ததில்லை என எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பு மற்றும் பதிலறிவிப்பை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளதாக எனது அப்பா சொன்னார். முந்தைய வழக்கு விவரங்கள் பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் எனது அப்பாவிற்குத்தான் தெரியும். எந்த வருடம்வரை நான் கோபியில் நிரந்தரமாக வசித்து வந்தேன் என்றால் எனக்கு சுமார் 7 அல்லது 8 வயது வரை கோபியில் வசித்து வந்தேன், பின்னர் கோவையில் வசித்து வந்தோம்.
2. அண்ணாமலை முதலியாரின் வாரிசுதாரர்கள் எப்போது பிறந்தார்கள் என்றால் 1950க்கு முன்பு பிறந்தார்கள் ஆனால் தேதி வருடங்கள்

தெரியாது. 1950ஆம் ஆண்டுவரை ஆண் குழந்தை பிறந்தவுடன் தந்தையாரின் சுயசம்பாத்திய சொத்தாக இருந்தாலும், கூட்டு குடும்ப சொத்தாக இருந்தாலும், மேற்படி ஆண் குழந்தைகளுக்கு பங்கு உள்ளது என்றால் சட்டம் இருந்தால் இருக்கலாம். மேற்படி பங்கு உள்ள நிலையில், அண்ணாமலை முதலியார் எழுதி வைத்த உயில் செல்லாது என்றும், மேற்படி உயில் செல்லாது என ஏற்கனவே தீர்மாணிக்கப்பட்டுள்ள நிலையில் நான் அதன் அடிப்படையில் உரிமைகோர முடியாது என்றால் சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டுதான், எனது அம்மாவின் பெயரில் உயில் எழுதப்பட்டது என்றும், அதன்அடிப்படையில் நான் சொத்தை விற்பனை செய்துள்ளோம் என்றால் சரியல்ல, 2003ஆம் ஆண்டே விற்பனை செய்துவிட்டோம், எனது அம்மாவின் பெயரில் 1987ஆம் ஆண்டிலேயே உயில் எழுதப்பட்டது.

3. அண்ணா சோப் கம்பெனி என்ற நிறுவனத்தை அண்ணாமலை முதலியார் நடத்தி வந்தார் என்றால் சரிதான். மேற்படி நிறுவனத்தில் அண்ணாமலை முதலியாரின் மகன்களும் பணிபுரிந்து வந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அண்ணாமலை முதலியார் இறந்தபோது, இருந்த மேற்படி நிறுவனம் மற்றும் ரொக்கதொகை ஆகியவை என்ன ஆனது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எனது அம்மாவின் பெயரில் உள்ள உயில் எப்போது எழுதப்பட்டது என்றால் 1987ஆம் ஆண்டு எழுதிவைக்கப்பட்டது. மேற்படி உயிலின் அசலை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அண்ணாமலை முதலியார் எழுதி வைத்த உயிலின் அசல் யாரிடம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி உயில் குறித்த விவரங்கள் எனது அப்பா சொல்லித்தான் தெரியும் என்றால் சரிதான். மேற்படி உயிலுக்கு பின்னிட்டு, சொத்துக்கள் எப்படி பராமரிக்கப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை அவரவர்கள் அனுபவித்து வந்தார்கள். மேற்படி விவரம் எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து தெரியும்.

4. அண்ணாமலை முதலியாருக்கு கூட்டு குடும்ப சொத்தில் 1/6 பாகம்தான் உள்ளது என்றும், மேற்படி பங்கிற்கு அதிகமாக அவர் எழுதி வைத்த உயில் ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. பொது குடும்ப சொத்தில் குறிப்பிட்ட செக்குபந்தியை குறிப்பிட்டு ஆவணம் எழுத அண்ணாமலை முதலியாருக்கு உரிமை இல்லை என்றால்

சரியல்ல, அது தனிப்பட்ட சொத்தாகும்.

5. மீனாட்சியம்மாளும், சகுந்தலாவும் சேர்ந்து 22.08.1984ல் கிரையம் வாங்கியதாக சொல்லியுள்ள நிலையில், யாரிடமிருந்து மேற்படி சொத்து கிரையம் வாங்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி கிரைய ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. மீனாட்சியம்மாளின் கணவரான ஏ.சி.ராமனின் பணத்திலிருந்துதான் சொத்து வாங்கப்பட்டது என்றால் இல்லை. மீனாட்சியம்மாள் என்ன தொழில் செய்துவந்தார் என்றால் அவருடைய சேமிப்பிலிருந்து சொத்தை கிரையம் வாங்கினார். மேற்படி மீனாட்சியம்மாளின் சேமிப்பு என்பது கூட்டு குடும்ப சொத்திலிருந்து கிடைத்த வருமானம் என்றால் இல்லை, எனது அப்பாவும், விசாலாட்சியின் கணவரான ஆறுமுகத்தின் உதவியாலும் வாங்கினார்கள். பொது குடும்ப நிதியிலிருந்து பொது குடும்பத்திற்காக வாங்கப்பட்ட சொத்து என்றால் இல்லை.
6. வாதி வழக்கு 1 வது அயிட்ட சொத்தில் வசித்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு 1 வது அயிட்ட சொத்தானது, எனது தாத்தா உயிருடன் இருக்கும்போதே விற்கப்பட்டது என்றும், மேற்படி சொத்து வாதிக்கு ஒதுக்கப்பட்டு, அதில் அவர் குடியிருந்து வருவதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு 1வது அயிட்ட சொத்து, யார் பெயரில் கிரையம் பெறப்பட்டது என்றால் அண்ணாமலை முதலியாரின் பெயரில் கிரையம் பெறப்பட்டது. மேற்படி கிரைய ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அண்ணாமலை முதலியாரின் தகப்பனாரின் சொத்து மற்றும் வருமான விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அண்ணாமலை முதலியாரின் குடும்பம் பூர்வீகமாகவே விவசாயம் செய்து வந்தார்கள் என்றும், அவர்களுக்கு, நிறைய இடங்களும், வருமானமும் இருந்தது என்றால் சரியல்ல, அண்ணாமலை முதலியார் தனிப்பட்ட முறையில் சம்பாதித்தார். அண்ணாமலை முதலியார் என்ன படித்துள்ளார் என்றும், என்ன தொழில் செய்தார் என்றும், அவருக்கு என்ன வருமானம் என்றும் எனக்கு தெரியுமா என்றால் அவருடைய படிப்பு தெரியாது, பீடி மற்றும் பிஸ்கட் விற்பனை செய்யும் மொத்த வியாபாரம் செய்து வந்தார், அவருடைய மொத்த வருமானம் எனக்கு தெரியாது. அண்ணாமலை முதலியார் அலீம் பீடி கம்பெனியில் உள்ளூர் முகவராக இருந்தார் என்றால் சரிதான். அண்ணாமலை முதலியார் வாங்கிய மற்றும் விற்பனை

செய்த சொத்துக்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. அண்ணாமலை முதலியாருக்கு வாரிசு அடிப்படையில் எவ்வளவு சொத்துக்கள் வந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அவர் சுயமாக சம்பாதித்த சொத்துக்கள் பற்றிதான் எனக்கு தெரியாது. உயில் செல்லாது என மேல்முறையீடு வழக்குகளிலும் தீர்ப்பான பிறகும், 2வது மேல்முறையீடு தாக்கல் செய்யாமலும், பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யாமலும் இருந்ததற்கான காரணம் என்ன என்றால் வாதியே சொத்துக்களை விற்பனை செய்ததால் நாங்கள் மேல்முறையீடு செய்யவில்லை.

7. வழக்கு சொத்துக்களில் இருந்து வாதிக்கு எந்த வருமானமும் கிடைக்காததாலும், அவர் சொத்தை அனுபவிக்காததாலும், அவருடைய உரிமை அற்றுப்போய்விட்டதாக எந்த அடிப்படையில் சொல்கிறோம் என்றால் எனது அப்பா எந்த அடிப்படையில் சொன்னார் என்று எனக்கு தெரியாது. 7ஆம் பிரதிவாதி சொத்தில் உரிமைகோராமல் இருப்பதாக சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். 09.07.1999ஆம் தேதியில் நஞ்சை புளியம்பட்டியில் உள்ள 1 ஏக்கர் 6 1/4 சென்ட் இடத்தை விற்பனை செய்ததாக சொல்லியுள்ளநிலையில், மேற்படி விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் வாதியின் அம்மா சொல்லியே எனக்கு தெரியும். மேற்படி விற்பனை செய்த சொத்து விற்பனைக்கு முன்பு உலகநாதனிடம் இருந்தது. நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக வாதி நடந்துகொண்டதாக சொல்லியுள்ள நிலையில் எந்த அடிப்படையில் சொல்லியுள்ளேன் என்றால் உயில் செல்லாது என கூறிவிட்டு, மேற்படி உயிலின் அடிப்படையிலேயே சொத்தை விற்பனை செய்துள்ளதால், அவ்வாறு கூறியுள்ளோம். உயில் செல்லாது என்று தீர்ப்பாகி உள்ள நிலையில், உலகநாதன் விற்பனை செய்தது செல்லாது என கூறி நடவடிக்கை எடுத்துள்ளோமா என்றால் இல்லை. 2008ஆம் ஆண்டில் வாதி கிரைய சம்மத பத்திரம் எழுதிக்கொடுத்ததாக சொல்லியுள்ள நிலையில் மேற்படி ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை, ஆனால் அதை பதிவு செய்துள்ளார்கள். மேற்படி பதிவு செய்துள்ள விவரத்தை நான் வில்லங்கத்தை பார்த்து தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை, எனது அப்பா பார்த்திருக்கலாம்.

8. அண்ணாமலை உயிருடன் இருந்த காலத்திலிருந்து தற்போதுவரை கூட்டு குடும்ப சொத்தை பொறுத்து பாகப்பிரிவினை எதுவும் நடைபெறவில்லை என்றால் உயில் எழுதி வைத்துள்ள விவரம்தான்

தெரியும், பாகப்பிரிவினை பற்றி எனக்கு தெரியாது. கூட்டு குடும்ப சொத்தை பொறுத்தவரையில் பாகப்பிரிவினை நடைபெறவில்லை என்றும், மேற்படி சொத்தில் கூட்டு குடும்ப உறுப்பினர் என்ற அடிப்படையில் ஒவ்வொரு வழக்கு சொத்திலும் 1/6 பாகம் உள்ளது என்றால் இல்லை, அது தனிப்பட்ட சொத்து ஆகும். 13 மற்றும் 14ஆம் பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணங்களானது, வாதிக்கு பாத்தியப்பட்ட 1/6 பாகத்தை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. முந்தைய வழக்குகளில் உயில் செல்லாது என தீர்ப்பாகியுள்ள நிலையில் அதற்கு எதிராக வாதுரைத்து சாட்சியமளிக்க முடியாது என்றால் சரியல்ல. வாதி கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.